<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 52/2016 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | பிரபாகரன் | நாள் | 10.07.2023 |
| தகப்பனார் பெயர் | கந்தசாமி | | |

<u>1 முதல் 5 மற்றும் 7 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–</u>

1) தற்போது நான் வசித்து வரும் இடத்தை எந்த வருடத்தில் வாங்கினேன் என்றால், சரியாக நினைவில்லை. மேற்படி இடத்திற்குரிய கிரய ஆவணத்தின் எண்ணோ அதில் யார் யார் எல்லாம் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தற்போது எனக்கு சரியாக நினைவில்லை.

2) மேற்படி நான் கிரயம் வாங்கும்போது அந்த நிலத்திற்குரிய மூல சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால், சர்வே எண்.226/8 ஆகும். தற்போது மேற்படி சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்டு ச.எண்.226/8A ஆக உள்ளது. நான் சொல்வது போல் ச.எண்.226/8A என உட்பிரிவு செய்யப்பட்ட நிலத்திற்கு என் பெயரில் ஏதேனும் பட்டாவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், சரியாக நினைவில்லை.

3) நான் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள நிலத்தை கிரயம் பெற்றேன் என்றால், 1550 சதுரடி உள்ள நிலத்தை கிழமேல் 30 அடி, தென்வடல் 50 அடி என்ற அளவில் கிரயம் பெற்றேன். ச.எண்.226/8 ல் உள்ள நிலமானது ஆரம்ப காலத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என எனக்கு தெரியுமா என்றால், ஆரம்ப காலத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என எனக்கு தெரியாது. ஆனால் 1975ம் ஆண்டில் R.K.பழனிசாமி செட்டியார் என்பவருக்கு மேற்படி நிலம் பாத்தியப்பட்டது.

4) மேற்படி R.K.பழனிசாமி செட்டியார் என்பவருக்கு எத்தனை மனைவிகள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், இரண்டு மனைவிகள். முதல் மனைவிக்கு கந்தசாமி செட்டியார் என்ற மகனும், இரண்டாவது மனைவிக்கு நாகமாணிக்கம் மற்றும் கோபாலகிருஷ்ணன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால், சரிதான்.

5) மேற்படி ச.எண்.226/8 ஆனது ஆரம்ப காலத்தில் 1940 வருடவாக்கில் ராமசாமி கவுண்டர் மகன் பெருமாள் கவுண்டருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால், அந்த விவரங்கள் எனக்கு தெரியாது.

6) இவ்வழக்கில் 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் மேற்படி நாகமாணிக்கத்தின் வாரிசுகள் என்றால், சரிதான். மேற்படி நாகமாணிக்கத்தின் தந்தை 29.10.1942ம் தேதியில் ஆவண எண்.2768/1942ன் படி ஒரு பெருமாள் கவுண்டர் என்பவரிடமிருந்து ச.எண்.226/8ல் 4 செண்ட் நிலத்தை கிரயம் பெற்றுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது.

7) மேற்படி 4 செண்ட் நிலம் தான் தற்போது ச.எண்.226/8A ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. நான் கிரயம் பெற்றதாக சொல்லும் நிலம் ச.எண்.226/8B என என் பெயரில் பட்டா எண்.1699 ஆக வருவாய் துறையால் வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் மேற்கண்ட பத்திகளில் ச.எண்.226/8A ஆனது என் பெயரில் உள்ளது என சொல்லியுள்ளது தவறானது என்றால், சரிதான். ஆனால், நான் ஞாபகமறதியால் அவ்வாறு சொல்லிவிட்டேன்.

8) ச.எண்.226/8A ற்கு என் பெயரிலோ, மற்ற வாதிகள் பெயரிலோ பட்டா இல்லை என்றால், என் பெயரில் மேற்படி ச.எண்.226/8A ற்கு பட்டா இல்லை. மற்ற வாதிகளை பொறுத்தும் மேற்படி சர்வே எண்ணில் பட்டா இல்லை.

9) ச.எண்.226/8 ஆனது பின்னிட்டு ச.எண்.226/8A ஆக உட்பிரிவு செய்யப்பட்டு 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி பட்டா, மோசடியாக பெறப்பட்டுள்ளது.

10) நான் சொல்வது தவறானது என்றாலும், 1942ம் ஆண்டு பழனிசாமி செட்டியார் மேற்படி 4 செண்ட் நிலத்தை கிரயம் பெற்று அவரது குடும்ப பாகபிரிவினையின் படி மேற்படி 4 செண்ட் நிலம் அவரது மகன் நாகமாணிக்கத்திற்கு ஒதுக்கப்பட்டு அவரது காலத்திற்கு பின் வாரிசுரிமை அடிப்படையில் 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள்

மேற்படி ச.எண்.226/8A ல் உள்ள 4 செண்ட் நிலத்தை அனுபவித்து வருகின்றனர் என்றால், சரியல்ல.

11) மேற்படி ச.எண்.226/8A ல் உள்ள நிலத்திற்கு முதலில் பட்டா எண்.148 எனவும் அதற்கு பின் புதிய பட்டா எண்.1264 எனவும் வருவாய் துறையால் வழங்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

12) ச.எண்.226/8 ற்கு வடக்கே துருகத்து எல்லை மாரியம்மன் கோவில் அமைந்துள்ளது என்றாலும், மேற்படி கோவிலும் ச.எண்.226/8 ல் தான் உள்ளது என்றாலும், மேற்படி கோவில் எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என எனக்கு தெரியாது.

13) மேற்படி மாரியம்மன் கோவிலுக்கு தெற்கு பகுதியில் பழனியப்ப செட்டியார், பழனிசாமி செட்டியாரின் முதல் மனைவியின் மகன் கந்தசாமி செட்டியார், கந்தசாமி செட்டியாரின் மகன் நாகராஜ் ஆகியோருக்கு சொந்தமான நிலம் ச.எண்.227/1 ல் அமைந்துள்ளது என்றால், மேற்படி நபர்களுக்கு நிலம் உள்ளது. ஆனால் அதன் சர்வே எண் எனக்கு தெரியாது.

14) மேற்படி ச.எண்.227/1 ற்கு தெற்குபுறத்தில் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் உள்ளது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி அரசு புறம்போக்கு நிலத்திற்கு தெற்குபுறத்தில் பழனிசாமி செட்டியாரின் இரண்டாவது மனைவியின் வாரிசான கோபாலகிருஷ்ணனுக்கு சொந்தமான நிலம் இருந்தது என்றால், சரிதான். ஆனால், அதை அவர்கள் விற்றுவிட்டனர்.

15) மேற்படி நிலத்தை கோபாலகிருஷ்ணன் யாருக்கு விற்பனை செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், கந்தசாமி செட்டியாருக்கு விற்பனை செய்துள்ளார். மேற்படி ச.எண்.227/1 ல் உள்ள நிலமும், கோவில் நிலமும், அரச புறம்போக்கு நிலமும், கோபாலகிருஷ்ணனுக்கு சொந்தமாக இருந்த நிலமும், ஜலகண்டாபுரம் ஆடையூர் பிரதான சாலைக்கு மேற்குபுறமாக தென்வடலாக அமைந்துள்ளது என்றால், சரிதான்.

16) மேற்படி நான்கு நிலத்திற்கும் மேற்குபுறத்தில் தான் ச.எண்.226/8A ஆனது அமைந்துள்ளது என்றால், கோவிலுக்கு தெற்குபுறத்திலும், கோபாலகிருஷ்ணனின் நிலத்திற்கு வடக்கு புறத்திலும், அரசு புறம்போக்கு நிலத்திற்கும், கந்தசாமி செட்டியார் நிலத்திற்கும் மேற்குபுறத்தில் அமைந்துள்ளது.

(1 முதல் 5 மற்றும் 7 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.